22

# கிண்டர்கார்ட்டன்

## கதையும் பாடலும்

20 JUN 1922

எலிமென்றரி பாடசாலைகளின்
உபயோகத்திற்கு செய்யப்பட்டது.

இஃது

பசுமலை யூனியன் வேதபோதனசாலை ஆசிரியர்
ஜான் சாமுவேல் குருபாதம்
என்பவரால் இயற்றப்பட்டது.

முதலாம் பதிப்பு—1000 காப்பிகள்.

காப்பிரைட் ரிஜிஸ்ட்டர்
செய்தது.]

[விலை 5 அண்

A. M. Lenox Press Pasumalai—1922.

OB
0-,3x N
N22
180007

## OPINION BY R. MICHAEL, ESQ., B.A.,

*Head-master, A. M. Training Institution, Pasumalai.*

I have great pleasure in going through the Kindergarten action songs prepared by Mr. J. S. Gurubatham. An attempt is made in this production to correlate the school subjects in order to create interest in children. The Ragams are very familiar to village pupils, the language simple and the object chosen in stories are familiar and therefore interesting to our Indian children.

The kindergarten occupations planned to do are highly practicable in village. I am strongly of opinion that the author has made an intelligent attempt to make the teaching of the subject a success in our Indian School life.

This book I think is far better than any on this subject that I have seen in the Tamil language. I have recommended this book to all my students under training.

(Sd.) R. MICHAEL.

---

## OPINION BY MISS GERTRUDE E. CHANDLER,

*Principal, A. M. Girls' Training School,*

MANGALAPURAM, MADURA.

This book is a thoughtful attempt to meet the need of many teachers in village school.

I heartily endorse the effort and wide spread use of book.

(Sd.) GERTRUDE E. CHANDLER.

372.215
1220

# கிண்டர்கார்ட்டன்

## கதையும் பாடலும்

### 1. கடவுள் துதி.

'ஐயா பழனிமலை வேலா' என்ற பாடல் மெட்டு.

1. வானம்புவி படைத்த நாதா—திரு
ஞானவுரு வெடுத்த நீதா
கானம் பாடி வந்தோம் பொற்பாதா நின்
கருணை அருளை நிதம் தாதா.

2. அண்டசராசரங்களனைத்தும்—அறு
தினங்களிலே படைத்து முடித்தும்
மண்டலம் தன்னையே புரக்கும்—நின்
வன்ன மலரடிகள் பணிந்தோம்.

3. பாலர் நாங்கள் பாடம் படிக்க—நின்
பரம அருளெமக்குக் கொடுக்க
ஞால முழுதும் உமை அடுக்க—இக்
காலந்தனில் கிருபை இடுமே.

4. பக்தர்கள் போற்றிடும் சீமானே—பர
முக்தியளித்திடும் கோமானே
இத்தரை மாந்தர் உமைக்காண—அருள்
நித்தம் புரியும் ஒளிதோண.

## 2. இராஜ வாழ்த்துப் பாடல்

னருளாலே இங்கிலீஷ் கொடிவாழ்க' என்ற மெட்டு.

1. எங்கும் புகழ் தங்கும் ஜார்ஜ் அரசன் வாழ்கவே
மங்கை மேரி ராணி மாது வாழ்க வாழ்கவே.

2. சுந்தர மிகுந்த விள வரசர் வாழ்கவே
சௌந்தரி மேரி விள வரசி வாழ்கவே.

3. மந்திராலோசனைச் சங்க மன்னர் வாழ்கவே
இந்திய கவரன்மெண்ற் என்றும் வாழ்கவே.

4. காசினிதனிலே யெங்கும் கல்வி ஓங்கவே
ராஜ விசுவாசம் பக்தி நேசம் ஓங்கவே.

5. கல்வி இலாகா மந்திரி கமிற்றி வாழ்கவே
கல்வி கற்கும் பாலர்கள் கருத்தாய் வாழ்கவே.

6. வாழையடி வாழையாக மன்னன் ஐந்தாம் ஜார்ஜ
மாநிலம் செங்கோல் தழைக்க மாதேவனருள்.

---

## 3. சிறுவர் பாடல்.

'வாசுதேவனே வந்தாளுமையனே' என்ற மெட்டு.

1. பாலரே வாரும் பாடசாலை ஏகுவோம்
பத்திரமாய் புத்தகங்கள் அஸ்தத்தில் வைத்து.

2. காலையிலெழுவோம் கடவுள் துதிசெய்வோம்
கருத்துடன் சில நிமிஷநேரம் படித்துமுடிப்போம்.

3. வாசிப்பு சிவிக்ஸு மனம் யோசிக்கும் கணக்கு [போம்
பாஷை இங்கிலிஷ் தமிழுடன் செய்யுள் பாடமும் படிப்

4. கதைகள் சொல்லுவோமதற் கிசையப்பாடுவோம்
கரும்பலகை தனிலே சித்திரம் வரைந்து பழகுவோம்.

5. களிமண்வேலையும் பல குச்சிவேலையும்
கட்டையடுக்கலும் வெகு இட்டமாய்ச் செய்வோம்.

6. தோட்டம் போடுவோம் பல நாற்றுகள் நடுவோம்
ஏட்டில் நிதம் பதிவுசெய்து இயற்கையைப் படிப்போம்.

7. வ்ரோபல் துரையவர் தந்த வெகுமதிகளை
தவறாமல் படித்து தழைத்து ஓங்குவோம்.

---



## 4. பக்தியுள்ள பறவைகள்.

ஒரு மரத்தில் ஆணும் பெண்ணுமாக இரண்டு குருவிகள் குடியிருந்தன. குச்சிகளினாலே ஒரு அழகிய கூண்டு அமைத்து, இறகுகளினாலே ஓர் மெத்தை செய்தன. அதற்குள் இரண்டும் வசித்தன. அதிகாலையில் எழுந்தவுடன் இவைகள் அழகாய்ப் பாடிக் கொண்டிருக்கும். சூரியன் வந்தவுடனே இரண்டும் பறந்துபோய் இரை தேடிக்கொண்டு வரும். இரவில் பத்திரமாய் நித்திரை செய்யும்.

மறுநாள் காலையிலே திரும்பவும் சத்தமிட்டுப் பாடும். சில நாட்களுக்குப்பின் பெண் குருவி முட்டையிட்டுக் குஞ்சு பொரித்தது. ஆண் பறவை மட்டும் இரைதேடி வரும். குஞ்சுகள் பெ

ரிதானவுடனே இன்னும் இரண்டு கூடுகட்டின. அப்புறம் அந்த மரத்தில் அநேக கூடுகள் உண்டாகி அநேக குருவிகள் வாசஞ் செய்தன.

ஒவ்வொரு பறவையும் அதிகாலையில் தன் பேடு குஞ்சுகளுடன் பாடும்போது அதிக சத்தம் உண்டாகும். இதைப் பக்கத்து வீட்டில் குடியிருந்த பையன் கவனித்துக்கொண்டேவந்தான். ஒரு நாள் அவன் தகப்பனிடம் சென்று அப்பா, ஏன் இந்தக் குருவிகள் ஒவ்வொரு நாளும் சத்தமிடுகிறது என்று கேட்டான். தகப்பன் பிள்ளையைப்பார்த்து மகனே, இந்தப் பறவைகள் நாள் முழுவதும் இரைதேடி வந்து இரவில் சாப்பிட்டு நித்திரைசெய்கிறது. காலையில் மறுபடியும் தங்களுக்குச் சுகத்தைக்கொடுத்த கடவுளைத் துதிக்கிறது என்று சொன்னார். பையன் அதிக ஆச்சரியப்பட்டு, குருவிகளும் கடவுளைத் துதிக்கிறதா என்று சொல்லி அன்றுமுதல் அதிகாலையில் கடவுளைத் துதித்தான்.

பாடல்.

'ஆண்டிப்பண்டாரம் உனை வேண்டிக்கொண்டோமே'
என்ற மெட்டு.

ஆதி மூலமே உமை ஒதிவந்தோமே.

1. வேத முறைப்படியே நாதனுரைப்படியே
ஒதக்கடலுடனே உலகமுழுதும் படைத்த—ஆதி

2. காலைநேரமதிலே காகம் குருவிபேடு
சாலவே பாடிப்போற்றும் சச்சிதானந்த சிவமே—ஆதி

3. ஞாலமதிலே மாந்தர் நாதனைக் கண்டுணர் [—ஆதி
கோலந்தனைக் காட்டிய கொற்றவா நினைப்பணிந்தோம்

4. மலை மரம் செடி கொடி வரிசையாகப் படைத்து
தலையாக மனுஷனையும் தமது சாயலாய்ப் படைத்த—ஆதி

5. ஆதி அந்தமிலாத சோதிசுடரொளியே
நீதிமறை நெறியே நின்மலா உமக்குத் தோத்திரம்—ஆதி

## 5. மலே.

அப்பா, அதோ, தூரத்தில் பெரிய மேடுபோல் தோன்றுகிறதே அதுவென்ன, நான் ஒருநாளும் பார்த்ததேயில்லே, கன்னங்கறுப்பாய்த்தோன்றுகிறதல்லவா? என்று முத்து உலாவப் போனபோது தன் தகப்பனிடத்தில் கேட்டான்.

முத்து, அதற்குத்தான் மலேயென்று பெயர். அது கல்லாலே ஆக்கப்பட்டிருக்கிறது. மனுஷர் செய்ததல்ல, கடவுளால் உண்டாக்கப்பட்டது. நீ அதைப் பார்க்க விரும்புகிறுயா என்று தகப்பன் கேட்டார்.

ஆம் அப்பா, இப்பொழுது போய்ப் பார்க்கலாமா என்று முத்து கேட்டான்.

இல்லே. நேரம் அதிகம் வேண்டும். இன்னொரு நாளேக்குச் சாவகாசமாய்ப் போவோம். ஆனுல் நான் மலேயைப்பற்றி உனக்குச் சொல்லுகிறேன். நீ அங்கே போய்ப் பார்க்கும்போது அவைகளேக் காண்பாய் என்ருர் தகப்பன்.

நல்லதப்பா, சொல்லுங்கள் என்ருன். முத்து, மலே அதிகப் பிரயோஜனமானது. அங்கே மனிதருக்குவேண்டிய சாமான்கள் எல்லாம் கிடைக்கும். கல், மரம், வாசனேத்திரவியம், மிருகங்கள், பறவைகள் எல்லாம் கிடைக்கும்.

மலேயின்மேலேறிக் கீழே பார்த்தால் தரையிலிருக்கிற ஊர், ஆறு, பட்டணம், மரஞ்செடிகள் வெகு அழகாய்த் தோன்றும்.

மழை பெய்யும்போது இங்கே விழுகிற ஜலம்தான் ஆறுகளாக ஓடிப் பூமியைச் செழிப்பிக்கச்செய்கிறது.

அந்த மலேயில் பார்த்தாயல்லவா வெள்ளேயாக ஒரு பொருள் தெரிகிறது. அது ஸ்வாமி கோவில், அங்கே ஜனங்கள் போய் ஸ்வாமி தரிசனம் செய்வார்கள் என்று சொல்லும்போது

அப்பா, நாம் ஒருநாளும் போகவில்லையே என்று முத்து கேட்டான்.

இப்பொழுது உன்னால் மேலே ஏறமுடியாது, இன்னுங் கொஞ்சக் காலத்துக்குள் போகலாம் என்று பேசிக்கொண்டே முத்தும் அப்பாவும் வீடுவந்துசேர்ந்தார்கள். முத்து எப்பொழுதும் மலையைப்பற்றியே பேசிக்கொண்டிருந்து ஒருநாள் மலைமேலேறிப் பார்த்துத்தன் தகப்பன்சொன்னதெல்லாம் உண்மையென்று கண்டான்.

பாடல்.

"அள்ளி அள்ளிக்குடிக்கும் பள்ள நீரோடையாம்" என்ற மெட்டு.

அந்தமான மலையின் விந்தையைப் பாருங்கள்
சந்தோஷங்கொண்டு ஆடுங்கள் கவி பாடுங்கள்.

1. நந்தவனங்கள்போல நாலு பக்கம் விருட்சம்
நன்றாய் வளர்ந்ததை நீ பார்—மலை சுற்றிப்பார்
நாலு கால் மிருகம் பறவை ஜந்துக்கள்
நலமாய் வசிக்கும் இடமதான

2. உச்சிமலையினின்று அச்சமின்றியே பார்த்தால்
மெச்சும்படியே காட்சிகள்—தரைதனிலுண்டு
பச்சை மரங்களும் ரஸ்தா பாதைகளும்
பட்டண வீடுகள் கட்டிட மாறுகள்

3. வீடுகட்டு மரங்கள் விதவிதமான கற்கள்
வேண்டும் வாசனைத் திரவியம்—மலைகொடுக்குமே
மேலேயிருக்கின்ற நீல ஆகாயமும்
மேலவன் மகிமை சாலவே புகழும்

4. ஆலயங்கட்டி மாந்தர் பூஜைகள் நடத்துமூர்
அமலனைப்பணிந்து எத்துமூர்—மாலை சாத்துமூர்.
வேகமாகவோடும் ஆறுகள் எல்லாம்
விதமாய் உற்பத்தி ஆகும் இடமே.

## 6. கப்பல்.

நடராஜன் என்ற ஒரு சிறுவனிருந்தான். இவனுடைய தகப்பன் ஒரு வியாபாரி. பல ஊர்களுக்கும்போய் சாமான் விற்றுவருவார். இவர்கள் திருவாரூரிலே குடியிருந்தார்கள். அது நாகபட்டணத்துக்குச் சமீபத்திலிருக்கிறது.

நடராஜன் மூன்றும் வகுப்பில் படித்துவந்தான. உபாத்தினி 'காகிதமடித்தல் வேலை' நடத்தும்போது நடராஜனுக்கு அதிக சந்தோஷம் உண்டாகும். விசேஷமாய்க் கப்பல் செய்யும்போது ஆச்சரியப்படுவான். தண்ணீரிலும் கப்பல் போகுமா என்று அடிக்கடி உபாத்தினியைக் கேட்பான். ஒரு நாள் தன் தகப்பனிடத்தில் தான் காகிதத்தில் செய்த கப்பலைக்கொண்டுவந்து, அப்பா, நீங்கள் நிஜமான கப்பல் பார்த்திருக்கிறீர்களாவென்று கேட்டான். ஆம் நாகபட்டணத்திலிருக்கிறது, சென்னையிலுமுண்டு. நான் அதில் ஏறிப்பிரயாணம் செய்திருக்கிறேன் என்றார். நடராஜன் அதிக உற்சாகத்தோடு அப்பா, நாகபட்டணத்தில் நமது சின்னையா இருக்கிறாரே அங்கே இல்லையாவென்று கேட்டான். ஆம். நீ கப்பல் பார்க்க ஆசைப்படுகிறதினால் அடுத்த லீவுகாலத்தில் கூட்டிப்போவேன் என்றார்.

நடராஜன் சமுத்திரக்கரையில் நின்று கப்பல் வருகிறதைப் பார்த்தான், அது வேகமாக வந்தது. அடுத்த நாள் தன் சின்னையாவுடன் போய் அறைகளையெல்லாம் பார்த்து ஆச்சரியத்துடன் தன் ஊருக்கு வந்தான். சமுத்திரக்கரையும் கப்பலும் அங்கு கண்ட காட்சியும் அவனுக்குப் புதுமையாகவேயிருந்தது.

### பாட்டு.

ஏல ஏலோ ஏலேலோ ஏல ஏலோ ஐலலோ

1. கப்பலிது ஏலேலோ கப்பலிது ஐலலோ
   கடல் மேலே ஏலேலோ ஓடும் கப்பல் ஐலலோ.
2. தண்ணீரில் ஏலேலோ மிதந்தோடும் ஐலலோ
   சமுத்திரங்கள் ஏலேலோ தாண்டிச்செல்லும் ஐலலோ.

3. வீடுபோல ஏலேலோ வசதிகளும் ஐலலோ
வேண்மெட்டு ஏலேலோ கொடுக்கும் கப்பல் ஐலலோ.

4. ஆடுமாடு ஏலேலோ தானியங்கள் ஐலலோ
அரசர்களும் ஏலேலோ ஏறிச்செல்வர் ஐலலோ.

5. துரைமார்கள் ஏலேலோ செய்த கப்பல் ஐலலோ
துறை முகத்தில் ஏலேலோ நிற்குதம்மா ஐலலோ.

6. அடுக்கடுக்காய் ஏலேலோ அறைகளுண்டு ஐலலோ
ஆவியினுல் ஏலேலோ பறக்குதம்மா ஐலலோ.

---

## 7. காகமும் குடமும்.

ஒரு கிராமத்தில் பஞ்சம் உண்டானது. ஜனங்களெல்லாரும் அதிக கஷ்டப்பட்டுச் சிலர் செத்துப்போனுர்கள். மற்றவர்கள் வேறு ஊர்களுக்குப் போய்விட்டார்கள். அந்த ஊரிலே ஒருவருமில்லை. மாடு, கன்று, காகம், குருவி ஒன்றுமே கிடையாது.

ஒரு நாள் ஒரு காக்கை வெகு தூரத்திலிருந்து பறந்துவந்து அதிகக் களைப்புடன் அந்த ஊருக்குச் சமீபத்திலிருந்த மரத்தண்டை வந்து அந்த மரத்தில் உட்கார்ந்தது. எங்கேயாவது கொஞ்சம் தண்ணீர் கிடைக்காதா என்று ஏங்கிக்கொண்டிருக்கையில் ஒரு மண்குடம் மரத்தின் பக்கத்தில் இருக்கக்கண்டது. ஆத்திரமாய்ப் பறந்து போய்ப்பார்த்தும் குடத்தடியில் கொஞ்சம் தண்ணீர் மாத்திரம் இருந்ததைக் கண்டது. ஆனுல் தனக்குக் குடிக்க முடியவில்லை. சற்று நேரம் யோசித்து அதன்பிறகு சிறுசிறு கற்களைப் பொறுக்கி அதற்குள் போட்டது. ஜலம் மேலே ஏறி குடத்தின் வாயண்டைவந்து சேர்ந்தது. காகம் ஆசை தீரக்குடித்து களைப்பு நீங்கிப் பறந்து அடுத்த கிராமம் சென்றது.

### பாடல்.

'பொன்னுர் மேனியனே' என்ற மெட்டு.

1. காகமொன் ரூர் நாளே தண்ணீர் தாகத்தாலே வாடி
வேகமாகப் பறந்து காகம் மேவின தோர் மரத்தை.

2. மரத்தினின்று பார்க்க ஒரு மட்குடம் தோன்றினதே
சிரத்தையுடனேகி அதில் சிறிது ஜலங்கண்டது.

3. கண்ட ஜலந்தனக்கு கடுகளவுமெட்டாததால்
அண்டையிலேயிருந்த கற்கள் அனைத்தும் போட்டதுள்ளே.

4. போட்டவுடனே ஜலம் பொங்கியே மேலெழும்ப
வாட்டந்தீருமாறு காகம் வாயால் குடித்ததையா.

5. பக்கத்தில் நின்று அதைப்பார்த்து இருந்த காகம்
பொக்கென அங்குசென்று மனப்பூர்த்தியாய்க் குடித்ததையா.

---

## 8. நதி.

துரைசாமி என்ற ஒரு சிறுவன் ஒரு நாள் சாயங்காலம் தன் தாத்தாவுடன் ஆற்றுக்குப்போனான். அவர்கள் வீட்டுக்குச் சமீபத்தில் தண்ணீர்க் குழாய் இருந்தது. நதி அதிக தூரத்திலிருந்தது. ஆகையினால் துரைசாமி ஒரு நாளும் ஆற்றுக்குப்போனதில்லை. தண்ணீரைக் கண்டவுடன் அவனுக்கு அதிக சந்தோஷமாயிற்று. உடனே தன் பாட்டனைப் பார்த்து:

தாத்தா, இதென்ன, இவ்வளவு ஜலம் எங்கேயிருந்து வருகிறது எங்கேபோகிறது, ஏன் நம்முடைய வீட்டண்டைவரவில்லை என்று வெகு ஆச்சரியமாய்க் கேட்டான். அதற்குத் தாத்தா பக்கத்திலிருந்த மலையைக் காட்டி, மழை பெய்யும்போது மலையில் விழுந்த தண்ணீர் சரேலென்று பூமிக்கு ஓடிவந்து பாய்வதினால் ஆறுகள் உண்டாகிறது என்றார்.

என் தாத்தா இந்த ஆற்று ஜலம் இவ்வளவு தூரத்திலிருக்கிறது, வீட்டண்டை இருந்தால் நமக்கு அதிகச் சுலபமாச்சுதல்லவா என்று கேட்டான்.

அதற்குத் தாத்தா நம்முடைய வீட்டண்டைவந்தால் ஆற்றினுடைய பிரயோஜனம் குறைந்துபோகும் என்றார்.

என்ன பிரயோஜனம் தாத்தா என்றான் துரைசாமி. ஆற்றைச் சுற்றிலுமிருந்த வயல்களைக் காட்டி இந்த வயல்களுக்கெல்லாம்

தண்ணீர் பாயவேண்டும். இல்லாவிட்டால் ஜனங்கள் சாப்பிட முடியாது. தானியம் விளையாது. சில ஊர்களுக்கு ஆற்று ஜலம் குடிக்கக் கிடைக்கும் என்றார்.

இன்னும் சிலர் ஸ்நானம்பண்ணுவதையும் பெண்டீர் புடவை துவைத்துக் குடத்துள் ஜலம் கொண்டுபோவதையும் பார்த்த துரைசாமிக்கு ஆச்சரியம் அதிகம் உண்டாகவே அவன் தாத்தா விடம் கேள்விகேட்டுக்கொண்டே வந்தான்.

பாடல்.

'வெள்ளிமலையொத்த பலமேடை' என்ற வர்ணமெட்டு.

1. வேகமாக ஓடும் நதி பாரு—அது
மே மலையை விட்டு வரும் ஆறு—அங்கு
வித விதமாய் கனிமரங்கள் இருமருங்கும்
நிற்கிறதைப்பாரு சற்றுசேரு

2. வாசமுள்ள லீலி ரோஜா பூக்கள் தேனை
வந்துமொய்க்கும் உண்பதற்கு ஈக்கள்—அங்கு
வண்ணமிகும் மின்னலொளி சின்ன
மீன் சுளும்புவதைப் பாராய் சற்று வாராய்.

3. பசுவினை தண்ணீர் குடிக்கு மிடமும்—நல்ல
பாவையர் நீர்மொண்டு செலும் இடமும் உண்டு
பக்குவமாய் வண்ணார் துணி மிக்கவே வெளுக்கும்
இடமுண்டு பார்கண்கொண்டு.

4. சின்னஞ் சிறுபையன்களைப் பாரு அவர்
சீராய் நீந்திவிளையாடுறார் ஜோரு—அங்கு
செம்படவர் வலைகளுடன் ரெம்ப
மீன்பிடிக்கிறார்கள் பார்த்தால் என்ன நேர்த்தி.

## 9. தனபாலன்.

தனபாலன் என்ற ஒரு பையனிருந்தான். அவன் பள்ளிக்கூடம் போகப்பிரியப்படுகிறதில்லை. காலையிலெழுந்து தகப்பனுக்குத் தெரியாமல் விளையாடப்போவான். சாப்பிட்டு முடிந்தவுடன் புத்தகப்பையை எடுத்துக்கொண்டு பாடசாலைக்குப்போகிற வழியிலுள்ள ஒரு மரத்தில் விளையாடுவது வழக்கம். ஒரு நாள் இவன் இப்படியே விளையாடிக்கொண்டிருக்கையில் எறும்புகள் கூட்டங் கூட்டமாக ஓடுவதைப் பார்த்தான். ஒரு எறும்பாவது நின்று வீணே பொழுதுபோக்காமல் அங்கும் இங்கும் ஓடுவதும் வளைக்குள் நுழைவதுமாயிருந்ததைக் கண்டான். மரத்தின்மேலே அண்ணாந்து பார்த்தான். அநேக ஈக்கள் ஒரு தேன் கூட்டை மொய்த்துக்கொண்டிருந்ததுபோலத் தோன்றினது. ஒரு கல்லை எடுத்தெறிந்தான். தேன் கூட்டைவிட்டுப் பிரிந்த ஈக்கள் மறுபடியும் ஆத்திரமாய் தேன்கூட்டை மொய்த்தன.

ஆ, இந்த வெகு சிறிய பிராணிகள் ஒன்றுஞ் சும்மாயிருக்கவில்லையே, நான்மாத்திரம் ஏன் வீணே பொழுதுபோக்கவேண்டுமென்று நினைத்துப் பள்ளிக்கூடத்துக்குப்போவது நல்லது என்று மரத்தைவிட்டு ரோட்டுக்குவந்தான். அப்போதுதான் கொஞ்ச தூரத்தில் சில பையன்கள் பாடசாலைக்குப்போகிறதைக் கண்டு தனபாலனும் வேகமாய் ஓடினான். அப்பொழுதுதான் மணி அடித்தது. வகுப்புக்குப்போய் உட்கார்ந்தான். உபாத்தியாயர் அவனைப் பார்த்து சந்தோஷப்பட்டார். பாடம் சரியாய் ஒப்பித்தான்.

கூடிய சீக்கிரத்தில் அந்தப் பாடசாலையின் சட்டம்பிள்ளையானான்.

### பாடல்.

"தெற்குமுகமாயிருக்கும் தக்கிணைப்பாரு" என்ற மெட்டு.

1. காலைநேரமதிலே தனபாலனு மெழுந்தான்—அவன்
   கையால் முகங்கழுவிச் சாப்பிட்டுப் புஸ்தகமெடுத்தான்.

2. பாடசாலை போறேனென்று பெற்றோர்க்குச்சொன்னான்—
அவன் பாதையில் நடந்து ஒரு மரத்தண்டைபோனான்.

3. தரையிலே புத்தகத்தை வைத்துத் தவ்வி ஓடினான்—அங்கு
இரை பொறுக்க வந்த தேனிக்கூட்டத்தைக் கண்டான்.

4. பூப்பூவாய்ப் பறந்துசென்ற ஈக்களும் கண்டான்—அவன்
புதுத்தேனை புண்டுவரும் வண்டையுங் கண்டான்.

5. எறும்புகள் சுறுசுறுப்பாயிருப்பதைப் பார்த்தான்
எடுத்துப் புத்தகமுடனே பள்ளிக் கோட்டம்பிடித்தான்.

6. சரியான நேரத்தில் தனபாலனும் சேர்ந்தான்
சரியாகப் பாடம் சொல்லி கணக்கிலே தேர்ந்தான்.

---

## 10. நரியும் திராட்சைக்குலையும்.

ஒரு நாள் காலைநேரத்தில் ஒரு நரி இரை தேடும்படி வெளியே போனது. ஒன்றும் கிடைக்கவில்லை. ஆற்றுப்பக்கம் போனது ஒரு மீனாவது நண்டாவது கிடைக்கவில்லை. வீட்டுப் பக்கம் சென்றது. ஒரு கோழிக்குஞ்சுகூடக் கிடைக்கவில்லை. கடைசியாக ஒரு தோட்டத்துக்குப்போய் பசிக்களைப்பால் ஒரு மரத்தடியில் படுத்துறங்கியது. கொஞ்ச நேரத்துக்குப்பின் எழுந்து மேலே மரத்தைப்பார்த்தது. அங்கு ஒரு திராட்சச்செடியில் ஒரு அழகான பழக்குலை தொங்கினதைக்கண்டு அதைத் தின்னும்படி அதிகப் பிரயாசப்பட்டது. எட்டி எட்டித் தவ்வித் தவ்விப்பார்த்தும் முடியவில்லை. கூடியவரை பிரயாசப்பட்டும் ஆகவில்லை.

கடைசியாக அதிக வருத்தப்பட்டு மனம் வெறுத்து இந்தப் புளிப்புப்பழம் எனக்கு வேண்டாம். இதைச் சாப்பிட்டால் தேகத்துக்குச் சுகமில்லையென்று சொல்லிக்கொண்டு அந்த இடத்தைவிட்டுச் சென்றது.

பாடல்.

"காட்டுத்துளசியை வெட்டுவாராம்" என்ற மெட்டு.

தானன்ன தன்ன தன்ன தன்னானே தன
தானன்ன தனன தன்ன தன்னானே.

1. காலை நேரமெழுந்த நரி ஒன்று—ஊர்ச்
[1]சாலை யோரங்களெல்லாம்—ஓடிச்சென்று

2. [2]கோழி கிடாய் ஒன்றும் கிடையாமல்—அதன்
பாழி [3]வயிற்றில் ஒன்றும் அடையாமல்

3. ஆற்றின் படுகைகளெல்லாம் ஏகி—ஆங்கு
சேற்றில் [4]நகரும் நண்டும் காணாதாகி

4. வாட்டமுகத்துடனே திரும்பினது—பக்கத்
தோட்டத்தில் திராட்சக்குலை [5]தொங்கினது.

5. பச்சை இலைகள் ஊடே குலை தொங்கக்—கண்டு
இச்சையாய் இதின் [6]குலைப் பசி நீங்க

6. கிட்டப்போய் உமிழ்ஊற மனமகிழ்ந்து—[7]குதித்
தெட்டிப்பார்த்துக் கிட்டாமல் மனமிழிந்து

7. எட்டாத பழத்துக்கு [8]என்னசெய்வேன்—வாயால்
கொட்டாவி விட்டாலும் கிட்டாதையா.

8. [9]வேண்டாமெனக்கு இந்தப்பழம் புளிப்பே—நல்லோர்
தீண்டார்கள் தின்றாலும் பல் இழிப்பே

9. என்று சொல்லி நரியும் [10]ஏகலாச்சு—வாயை
மென்று உடல் [11]பசியால் வாடலாச்சு.

## அபிநயக்குறிப்புகள்

[1]இரண்டு கைகளையும் நீட்டி ஓர் பக்கம் காட்டுக.

[2]கைகளால் கோழி மாதிரி காட்டவும்.

[3]வயிற்றைத் தொடுக.

[4]கைவிரல்களை ஆட்டி நகரும் பாவனை காட்டு.

[5]வலது கைவிரல்களைக் கீழே தொங்கவிட்டுக் குலைபோல [காட்டு.

[6]ஈரக்குலையைக் காட்டு.

[7]குதியைத் தூக்கி ஓடுகிற மாதிரி காட்டு.

[8]வலதுகையால் வயிற்றைத்தொட்டு கையைவிரி.

[9]கையால் வேண்டாமென்று சொல்வதுபோலக் காட்டு.

[10]ஒரு பக்கமாய்க் கைகளை வீசு.

[11]நெஞ்சைத் தொடு.

இ. சா. தொழில்.

| | |
|---|---|
| கதை. | பாட்டு. |
| சித்திரம். | நரி, செடி, குலை. |
| காகிதம் கிழித்தல். | நரி. |
| களிமண்வேலை. | திராட்சக்குலை. |
| குச்சிவைத்தல். | செடிபடரும் கொழுகொம்பு, தோட்டக் [கமலை. |
| கட்டையடுக்கல். | ஆறு, ஆற்றுப்பாலம். |
| காகிதம் மடித்தல். | ஆற்றில் போகும் ஓடம். |

---

## 11. தவளையும் சுண்டெலியும்.

ஒரு நாள் காலையில் ஒரு வயலண்டை ஒரு சுண்டெலிக் குஞ்சு நின்றுகொண்டிருந்தது. ஆற்றுக்கு அப்புறத்திலுள்ள ஒரு வயலில் அதனுடைய மாமன் குடியிருந்தது. அந்த வீட்டில் ஒரு கலியாணம் நடந்தபடியால் எலிக்குஞ்சு அங்குபோகப் பயணப்பட்டது. நடுவே ஆறு இருந்தது. அதில் தண்ணீர்ஓடியதால் எலிக்கு நடந்துசெல்லக் கூடவில்லை. ஆகையினால் எப்படிச் செல்வதென்று எண்ணி அதிக விசனப்பட்டுகொண்டிருந்தது. அப்பொழுது அந்த ஆற்றிலிருந்த ஒரு பெரிய தவளை அந்த எலிக்குஞ்சண்டை சென்று சுகசெய்தியை விசாரித்தது. சுண்டெலி நான் அக்கரைக்குப் போகவேண்டும், பாலத்தைத் தப்பிவந்துவிட்டேன், எப்படிப்போகலாமென்று தெரியாமல் விசனப்பட்டுக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னது. அப்போது தவளை அதை மோசம்பண்ண எண்ணங்கொண்டு நான் உன்னைக் கொண்டுபோய் சுகமாய்ச் சேர்ப்பேன் என்று சொல்லி தன் காலுக்கும் எலிக்குஞ்சின் இடுப்புக்கும் ஒரு கயிற்றைக் கட்டி என் முதுகின்மேல் ஏறிக்கொள் என்று சொல்லி தவளை நீந்தினது.

நடு ஆற்றுக்குள் வந்தவுடனே தவளை வேகமாக நீந்தினது. எலி பயந்து அண்ணா, கொஞ்சம் மெதுவாகப் போ என்று கெஞ்சிக்

கேட்டும் தவளை வேகமாக நீந்தினது. எலி பயந்து கீச்சென்று கத்தினது. இதை ஆகாயத்தில் பறந்த ஒரு பருந்து எலியின் சத்தத்தைக்கேட்டு பரிதாபப்பட்டுக் கீழே பறந்துவந்து எலியைத் தூக்கிக்கொண்டு கூட்டுக்குப்போனது. தவளையும் தொங்கிக்கொண்டே வந்தது. தவளையின் துஷ்ட குணத்துக்காக அதைக்கொன்று தின்று சுண்டெலியைப் பாதுகாத்தது.

பாடல்.

'உள்ளூரு வங்கணமே' என்ற மெட்டு.

1

தவளை: ஆறாத்துயரமுடன் ஆற்றங்கரையில் முகம்
வேறாயிருப்ப தென்ன [1]விளம்புவாய் சுண்டெலியே.

2

சுண்டெலி: [2]அக்கரை தன்னிலம்மான் அகத்தினில் விருந்துண்டு
பொக்கெனப் போவதற்குப் [3]புகல்வாய் வழியும் நீயே.

3

த. [4]ஐயப்படாதே எலி அண்ணா நானிருக்கும்போது [ன்.
பையவே உனை யான் [5]தூக்கிப் பாங்காக நீந்திச்செல்வே

4

எ. குறையென்ன எந்தனுக்குக் கூறுவாய் தவளையண்ணே
விரைவாக நீந்திச் சென்றால் விருந்துண்ணப்போய்
விடலாம்.

5 [டேன்

த. இந்தக் கயிற்றையெந்தன் இடுப்பினில் [6]கட்டிவிட்
அந்தமாய் உந்தன் காலில் அழுத்தியே[7]கட்டிக்கொள்ளு

6

எ. கட்டியேவிட்டேன் அண்ணா மெட்டாக [8]நீந்தி நாமும்
பொட்டெனப் போனாலுமே பூசைக்கு முந்திடலாம்.

7

த. புத்தி கெட்ட எலியே போகும் வழி அறியாயென்று
தத்தித் தத்தித் தவ்வியே தண்ணீருள் [9]மூழ்கினது.

8

௭. அண்ணா அழுத்தாதென்னை எண்ணாமல் வந்துவிட்டேன்
புண்ணாக எந்தன் மனம் போகாதே தண்ணீருள்ளே.

9

௯. சின்னவெலியின் சத்தம் சீராய்க்கேட்ட பருந்து
என்னென்று கீழேவந்து எலியைத் தூக்கிச்சென்றது.

10

தவளை தனையேகொன்று தாரகம் எலிக்களித்த [வீர்
பவள்வாய்ப் பருந்துபோல பாருளோர் நன்மை செய்

## அபிநயக்குறிப்புகள்.

[1] வலது கை விரலைமூடி ஒன்றை விசாரிப்பதுபோல் காட்டு.

[2] கையை நீட்டித் தூரத்தைக் காட்டு.

[3] வதுபோல்.

[4] நெஞ்சில் கையை வைத்து மறுபடி எடுத்து வேண்டாமென்பதுபோல காட்டு.

[5] இரு கைகளாலும் தூக்குவது போலக் காட்டு.

6 [7] இடுப்பிலும் கைகளிலும் கயிறுகட்டுவதுபோல செய்.

[8] இரண்டு கைகளையும் வீசி நீச்சடிப்பதுபோலக் காட்டு.

[9] மூக்கைப் பிடித்துத் தலையைக் குனியச்செய்.

## கி. கா. தொழில்.

| | |
|---|---|
| சித்திரம். | தவளையும் எலியும் கயிறுகட்டி நீந்துவதுபோல் காட்டு. |
| காகிதம் கிழித்தல். | தவளையும் எலியும் நேர் நேர் உட்காருவதுபோல் காட்டு. |
| கட்டையடுக்கல். | ஆறு, பாலம். |
| காகித மடித்தல். | ஆற்றில் போகும் ஓடம். |
| குச்சியடுக்கல். | பருந்தின் கூடு, ஓடம். |
| களிமண்வேலை. | எலி. |
| கயிறுபோடுதல். | ஆறு. |

## 12. களிமண் வேலை.

"போவோமடி தோழிமாரே பூங்காவனம் தன்னை நோக்கி"
என்ற மெட்டு.

1. வாருங்களே தோழன்மாரே வாகாய்க் களிமண் எடுப்போம்
சீராக மணலும் சேர்த்து செய்திடுவோம் பாத்திரங்கள்.

2. அம்மிக்கல் குளவிக்கல்லும் ஆனதிரிகையுரலும் [வோம்
செம்மையாய் பூந்தொட்டியும் சிறப்பான குடங்கள் செய்

3. முயல் செய்வோம் ஆமை செய்வோய் மூஞ்சுறு எலியும் செய்வோம்
கயல்போன்ற மீன்களுடன் காளை குதிரை செய்வோம்.

4. கத்தரிக்காய் மிளகாய் கனமான பூசணியும்
பத்திரமாய் வாழைச்சீப்பும் பாகை, புடலைசெய்வோம்.

5. செப்புக்குடம் தவலை சீராக யானை செய்வோம்
அப்பம் சுடும் சட்டியும் அந்தமாயடுப்பும் செய்வோம்.

---

## 13. காகித மடித்தல்

காம்போதி. ஆதிதாளம்.

1. காகிதங்கள் நாம் மடிப்போம் கண்மணிகளே
சாதகமாய்க் கத்தரியால் சதுரமாய் வெட்டி.

2. கத்திக்கப்பல் தோணிக்கப்பல் களிப்புடன் செய்வோம்
வெத்திலைகள் போட்டுவைக்கும் கொட்டானும் மடிப்போம்.

3. அந்தமாகப் புத்தகம்போல் அழகாய் மடிப்போம்
அவைகளெல்லாம் வைக்கும் ஒரு அல்மேரா செய்வோம்.

4. கால்சட்டைகள் கைச்சட்டைகள் கணக்காய் மடிப்போம்
கால்களிலே மாட்டிக்கொள்ளும் பூட்சும் செய்வோம்.

5. சொந்தமான வீடு ஒன்று துரிதமாய்ச் செய்வோம்
விந்தையான கோழிபன்றி மீன்வகை செய்வோம்.

---

## 14. குச்சியடுக்சல்.

"கருணைநிதி நம்மரசை" என்ற மெட்டு.

1. குச்சிகள் நாம் அடுக்கிடுவோம் பட்சமாக வந்திடுங்கள்
பச்சை, மஞ்சள், கருப்பு வர்ணம் பல குச்சிகள் வைத்திடு
வோம்.

2. பூந்தொட்டியும் சாய்ந்த எணி, வாய்ந்த பெஞ்சும் வைத்திடு
வோம்
வேந்தர்களும் விரும்பும்படி விந்தையான கப்பல் செய்
வோம்.

3. மேசையுடன் நாற்காலியும் விதவிதமாய்ப் பெஞ்சு செய்
வோம்
ஆசையுடன் வீடு ஒன்றும் போர்டுஸ்டான்றும் செய்திடு
வோம்.

4. இந்திய தேசபடம் லந்தர் கம்பம் வைத்திடுவோம்
அந்தமதாய்ப் படுத்துறங்க அழகான கட்டில் செய்வோம்.

5. தெப்பக்குளத்துடனே சின்ன ஒரு படகு செய்வோம்
ஒப்பிதமாய்க் காற்றாடியும் ஆற்றுப்பாலம் ஏற்றம் செய்
வோம்.

---

## 15. பார்ப்பனத்தியும் கீரிப்பிள்ளையும்.

தர்மபுரியென்னுமோர் சிற்றூரில் ஆத்துமநாதன் என்ற ஒரு பிராமணனிருந்தார். அவர் மனைவியின் பெயர் மீனாட்சி. இவ்விருவருக்கும் வெகுகாலமாய்ப் புத்திரபாக்கியமில்லை. ஆதலால் ஒரு கீரிப்பிள்ளை வாங்கி தமது சொந்தப் பிள்ளைபோல் வளர்த்

துவங்தார்கள். சிறிது காலஞ்சென்ற பின் மீனாட்சியம்மைக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குச் சூரிய நாராயணன் என்று பெயரிட்டனர். ஒருநாள் மீனாட்சி தண்ணீர் மொண்டுவரப் போகவிருந்தபடியால் குழந்தையைத் தொட்டிலில் போட்டுவிட்டு தனது கீரியையும் காவல் காக்கும்படிசெய்து குடத்தையெடுத்துக்கொண்டு நதிக்குப்போனாள். வீட்டில் கொஞ்ச நேரத்துக்குள் உஜ் என்ற சத்தமுண்டாயிற்று. கீரிப்பிள்ளை ஓடிப்பார்க்கும்போது ஓர் கருநாகன் பொந்திலிருந்து குழந்தையின் தொட்டிலண்டை வரக்கண்டது. உடனே அப்பாம்பைத் துண்டம் துண்டமாய்க் கடித்தெறிந்துவிட்டு இரத்தமோடும் வாயுடன் வாசற்படியண்டை வந்துநின்றது. மீனாட்சி தண்ணீர்மொண்டு திரும்பிவருகையில் கீரியையும்வாயில் இரத்தத்தையுங் கண்டவுடன் தன் மகனைத்தான் கீரி கொன்றுவிட்டதென்று நினைத்து முன்பின் யோசியாமல் நிறை குடத்தைக் கீரியின் தலையில் போட்டாள். கீரியும் உடனே மாண்டது. உள்ளே சென்றபோது தொட்டிலின் கீழ் பாம்புத்துண்டங்களைக் கண்டவுடனே தன் குழந்தை பதனமாயிருக்கிறதென்றறிந்து கையை நெரித்துத் தலையிலடித்துப் பதைபதைத்துக் கீரியைக்கொன்றதற்காக அழுது புலம்பினாள். ஆத்மநாதய்யரும் வந்து சங்கதியைக் கேட்டவுடனே துன்பவெள்ளத்திலமிழ்ந்தார்.

பாடல்.

கும்மி.

1. பார்ப்பானொருவன் பாப்பாத்தியுடன் வெகு
பட்சமாய் வாழ்ந்து வருநாளில்
பார்த்துச் சுகிக்க குழந்தையின்றி மனப்
பூர்த்தியாய்க் கீரி வளர்த்தனரே.

2. கீரியைப் பாங்காய் வளர்க்கும் நாள் தன்னில்
கிளி மொழி மாதுமே கர்ப்பம் வாய்ந்து
[1]சூரியப்ரகாசம் போல விலங்கிடும்
சொர்னமயமான [2]பிள்ளை பெற்றாள்.

[1] சூரியனைக் காட்டுக. (மேலே)
[2] இரண்டு கைகளையும் ஏந்துக.

3. பத்திரமாகவே பிள்ளையைப் பார்ப்பினி
சித்த மிசைந்து வளர்த்து வர
ஒத்தநாள் தன்னி [3]லுறங்கும்போது பிள்ளை
சத்தமின்றியே [4]தண்ணீர்க்குப் போனாள்.

4. அந்தணன் தன் செயல் பார்க்கும்படி
அந்தமதாக வெளியேறினான்
பந்தமாய் வளர்த்த கீரியும் பிள்ளையைப்
பத்திரமாய்க் காவல் செய்ததையா.

5. அந்த வேளை தன்னி லோர் [5]கரும் பாம்புமே
பொந்திலிருந்துமே சீறிவர
விந்தையாய்க் கீரியதைக்கொன்றுமே இரத்தம்
சிந்தினபடி வெளிவந்தது

6. பார்ப்பினி திரும்பையில் பார்த்துவிட்டாள்
பதைபதைத்துக் கையை [6]நெரித்துக்கொண்டாள்
பாலனைக் கொன்றபடுபாவியென்று நீர்ப்
பாத்திரம் தன்னைத் தலையில் [7]போட்டாள்.

7. கீரிமரிக்கக் கிளிமொழி சிரித்துக்
கீழே கிடக்கின்ற துண்டம் பார்த்தாள்
ஆரியக் குழந்தை அயர்ந்துறங்கக் கண்டு
அந்தவிடம் வீழ்ந்து துன்பம் [8]உற்றாள்.

8. யோசியாமல் கொன்ற கீரியை நினைத்து
[9]நாசி புண்ணாக அழுதனளே
ஆசைக்கணவன் அடுத்த பின்னர் செப்பி
மோசம்போன விதம் ஓர்ந்தனளே.

## அபிநயக்குறிப்புகள்

[3]தூங்கும் பாவனை அல்லது குழந்தையைத் தாலாட்டல்.
[4]குடம் கக்கத்தில் அல்லது தோளின்மேல் வைப்பதுபோலக் காட்டு.
[5]கையைப் பாம்புபோல அமைத்துக் காட்டு.
[6]இரண்டு கைவிரல்களையும் நெரிக்க.
[7]குடத்தைப்போடுவதுபோல் காட்டு.
[8]கீழே விழுவதுபோல் சாய்ந்து தலையில் கைவை.
[9]மூக்கைத் தொடுக.

## கி. கா. தொழில்.

| | |
|---|---|
| கதை, பாட்டு, | |
| சித்திரம். | பாம்பு, நரி, மனிதர். |
| காகிதம் கிழித்தல். | ஷை. |
| களிமண் வேலை. | குடம். |
| குச்சியடுக்கல். | வீடு, தொட்டில் அல்லது கட்டில். |
| காகித மடித்தல். | தொட்டில். |
| கட்டை யடுக்கல். | கிணறு, ஆறு, ஏரி, வாய்க்கால். |
| மணிகோர்த்தல். | பிள்ளையின் கழுத்தில் கட்டும் பாசி. |
| பாய்பின்னல். | வீட்டில் விரிக்கும் பாய். |
| கோலம் போடல். | பிராமணாள் வீட்டில் போடுவதுபோல். |

---

## 16. பிரயாணிகளும் கரடியும்

இரண்டு சகோதரர் ஒருநாளில் ஒரு தூரமான பட்டணத்திற்குப் பிரயாணஞ்செய்தார்கள். தங்களுடைய ஊரில் வேலையில்லாதபடியால் வேறு தேசம்போக நேரிட்டது. அண்ணன் தம்பியை நோக்கி எனக்குப் பயமாயிருக்கிறது, காட்டில் துஷ்ட மிருகங்கள் வந்தால் என்னசெய்வோம் என்றான். அப்பொழுது தம்பி, நான் எல்லாவற்றையும் வாளால் வெட்டிவிடுகிறேனென்று சொல்லிக் கொண்டே நடந்துபோகையில் திடீரென்று ஒரு கரடி வந்தது. தைரியம் சொன்னவன் உடனே பக்கத்திலிருந்த மரத்தில் ஏறி இலைகளுக்குள்ளே மறைந்துகொண்டான். மற்றவனோ ஒன்றுஞ் செய்யமுடியாமல் செத்தவனைப்போல் படுத்துக்கொண்டான். கரடி வந்து இவனை மோந்துபார்த்தது. செத்த பிணமென்று நினைத்து அவனை ஒன்றுஞ்செய்யாமற் போய்விட்டது. உடனே மரத்திலிருந்தவன் இறங்கிவந்து : அண்ணா, கரடி உன்னிடம் காதோரமாய் வந்து என்ன இரகசிய சமாசாரம் சொன்னது என்று கேட்டான். தம்பி, உதவிசெய்கிறேனென்று சொல்லி ஓடிப்போகிறவர்களை நம்பாதே என்று சொன்னது என்றான்.

நாம் உதவிசெய்கிறவர்களாயிருக்கவேண்டும். சொன்னபடி செய்யவும் வேண்டும்.

பாடல்.

"வாசுதேவனே வந்தாளுமைந்தனே" என்றமெட்டு பின்மடக்கு.

1. அண்ணனே [1]வாரும் வெகு நன்னயமதாய்
இந்தகரை நீங்கி [2]வேறு தேசம் ஏகுவோம்.

2. தம்பியே, வாரேன் [3]வெம்பாதே மனம்
துன்பம் வந்தாற் காப்பதற்குத் துணைவரில்லையே.

3. [4]பயம் வேண்டாமே, கலங்கவும் வேண்டாம்
பாம்பு கரடி வந்தால் உயிர் வாங்குவேனுனே.

4. இப்படிப் பேசி இவர்கள் போகையில்
ஒப்பிசமாய்க் கரடி ஒன்று உறுமிவந்தது.

5. கரடியைக் கண்ட கன்னெஞ்சன் தானும்
மரத்தின்மேலே ஏறித் தன்னை [5]மறைத்துக்கொண்டனன்.

6. மற்றவன் தனின் சித்தத்தையடக்கி
செத்தவன்போல்விழுந்து [6]கிடந்தான் அக்கரைதனில்.

7. கரடி வந்தது உரமாய் [7]மோந்தது [யே.
திறமாய்ச் செத்த பிணமென்றெண்ணிச் சென்றதுவழி

8. மரத்திலிருந்தோனிறங்கி, வந்துமே கரடி
உரைத்ததைச் சொல் என்றவனையுற்றுக் [8]கேட்டனன்.

அபிநயக்குறிப்புகள்.

[1]வா என்று கூப்பிடுதல்போலக் காட்டவும்.

[2]கையை நீட்டிக்காட்டவும்.

[3]வலதுகையை நெஞ்சிலே வை.

[4] ஷை

[5]கையினால் முகத்தை மூடவும்.

[6]ஒரு பக்கம் சாயவும்.

[7]முன் கையை மூக்கண்டை கொண்டுபோகவும்.

[8]இடது காதை மூடி வலதுகையைச் செவியண்டை கொண்டுவா.

9. செய்வேனுதவியென்று சொல்லிச்செய்யாத
பொய்யுதட்டுக்காரனை யோர்போதும் நம்பாதே.

10. என்று கரடி இயம்பியதென்று [கொள்ளுவோம்.
அன்று சொன்னேன் வார்த்தையை நாம் என்றும்

### கின்டர்காட்டன் தொழில்.

| கதை. | பாட்டு. |
|---|---|
| சித்திரம், | கரடி, மனுஷர், மரம், வாள். |
| காகிதம் கிழித்தல், | ஷை ஷை |
| கட்டையடுக்கல், | வழியிற்கடக்கும் பாலம், கிணறு, வேலி. |
| காகிதம் மடித்தல், | சட்டை, கால்சட்டை, தொப்பி, சப்பாத்து [பை. |
| குச்சியடுக்கல், | காடு, மரம். |
| விதை வைத்தல், | காட்டுப்பாதை. |

---

## 17. சிங்கமும் எருதுகளும்.

ஒரு காட்டில் நான்கு எருதுகள் ஒன்றாய்ச்சேர்ந்து வசித்து வந்தன. ஒரே இடத்தில் புல் மேய்வதும், ஒரே தொட்டியில் தண்ணீர் பருகுவதும், ஒரே இடத்தில் உறங்குவதுமாயிருந்தன. இவைகளுக்குள்ளிருந்த நேசமானது ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரியச் செய்கிறதில்லை. ஒரு எருது பசும்புல்லைக்கண்டால் தனது கூட்டாளிகளைக் கூட்டிப்போய் மேய்வதுதான் வழக்கம். இவைகள் நன்றாய்த்தின்று கொழுத்தவைகளாயும் புஷ்டியுள்ளனவாயுமிருந்தன. துஷ்டமிருகங்கள் கண்டாலும் நான்கும் ஒன்றாகயிருப்பதைக் கண்டு பயந்து ஒடிவிடும். ஆனால் ஒரு சிங்கம் இந்த எருதுகளைப் பிடித்துத்தின்ன வெகுநாட்களாய் ஆசைகொண்டிருந்தது. இவர்களது சேர்க்கை ஜீவியத்தினால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சில நாட்களுக்குப்பின் எருதுகளுக்குள் விசனமுண்டாகி சண்டையும் ஆரம்பித்துவிட்டது. ஒன்றையொன்று கொம்புகளால் முட்டி

யும் கால்களால் உதைத்துக்கொண்டும் வெவ்வேறு காடுகளுக்குப் பிரிந்துபோயின. வெகுகாலம் காத்திருந்த சிங்கமானது இது தான் சமயமென்று கண்டு ஒவ்வொன்றையும் தனித்தனியே கொன்று விலாப்புடைக்கத்தின்றது.

சண்டையிட்டுப் பிரிந்ததினால் வந்தகேடு உயிர்ச்சேதமே. நான்கும் ஒன்றாயிருந்தபோது வராத சிங்கம் ஒவ்வொன்றையுங் கொன்றதின் காரணம் பிரிவினையே. பிரிவினையின் காரணம் சண்டையல்லவா?

## பாடல்

இராகம், இங்கிலீஷ்

"தந்தம் தந்தம் தனதனனா, or ஆட்டம் ஆட ஆரம்பிப்போம்"
என்ற மெட்டு.

1. எருது[1] நான்கு[2] ஓர் காட்டில் ஏகமாக வசித்தனவே
சிறிதுநேரம் பசியாமல் சீராய்க்காலம் கழிக்கையிலே

2. [3]புல்லைமேய்ந்து தண்ணீருண்டு புலங்களிலோடி [4]விளையாடி
தொல்லையின்றிக் கொழுத்ததினால் துட்டமிருகம் [5]அண்டவில்லை.

3. சிங்கம் ஒன்று இதைக்கண்டு சினந்து இவைமேலாசைகொண்டு
பங்கம் செய்து கொன்றுதின்னப் பாவி மனதிலெண்ணினது.

4. ஒருநாளெருதுகள் [6]சண்டையிட்டு ஒவ்வொன்றுங் [7]கொம்பால் முட்டிக்கொண்டு
பிரிந்து வேறு காடுகளைத்தெரிந்து வசித்துவந்தனவே.

5. காத்திருந்த சிங்கமது ஆத்திரமாய்க் கொன்றுதின்ன
ஏற்ற சமயமென்றுசொல்லி எண்ணின காரியம் முடித்ததையா.

## அபிநயக்குறிப்புகள்.

[1]நான்கு விரலைக்காட்டு. [2]ஒரு விரலைக்காட்டு. [3]வலதுகையை வாயண்டை கொண்டுபோ. [4]இரண்டு கைகளையும் விரித்து, இடது காலை ஒரு அடி முன்வைத்துக் கைகளைச்சேர். [5]வலதுகையை வேண்டா மென்பதுபோல காட்டு. [6]இரண்டு கைவிரல்களையும் சேர். [7]தலையினால் முட்டுகிறமாதிரி காட்டு.

## கின்றர்கார்ட்டன் தொழில்.

| | |
|---|---|
| சித்திரம். | எருது, சிங்கம், மரம், தண்ணீர் ஓடும் ஆறு, குளம் |
| கட்டையடுக்கல். | தொட்டி, கிணறு, குளம், ஆறு, பாலம். |
| களிமண் வேலை. | எருதின் தலை, சிங்கத்தின் தலை, தொட்டி. |
| குச்சிவைத்தல். | மரம், மாட்டுத்தொழு, சிங்கம் அடைக்கப்படும் [கூண்டு. |

JB
0-1 3 D
NR





## 18. இரண்டு பெண்கள்.

சிந்துநதிக்கரையில் இரத்னபுரி என்ற ஒரு அழகிய சிறு பட்டணம் உண்டு. தென்னை, பலா, கொய்யா, வாழை முதலிய மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்தபடியால் அந்தப் பட்டணமே ஒரு சோலைபோல் விளங்கிற்று. அங்குள்ள விசேஷம் என்னவென்றால் சிறுவர் சிறுமிகள் எல்லாரும் பள்ளிக்கூடத்தில் கட்டாயமாய்ப் படிக்கவேண்டியது. ஆனபடியால் அப்பட்டணம் கல்வியால் நிறைந்திருந்தது. அதினால் சிறுவர் சிறுமிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாயிருந்தனர். ஒருநாள் சாயரட்சையில் கமலாட்சி, விசாலாட்சி என்ற இரு பெண்கள் ஆற்றின் மார்க்கமாய் உலாவும்படி போனார்கள். கமலாட்சி அதிகம் கற்ற பெரிய பெண்ணாயிருந்தாள்.

விசாலாட்சியோ வெகு சிறியவள். இருவரும் ஆற்றின் பாலத்தின் மீது நின்றுகொண்டு தண்ணீர் ஓடுவதையும், மீன்கள் சுளும்புவதையும், மாடுகள் தண்ணீர் குடிப்பதையும், தம்மைப்போல் சில பெண்கள் குடம் விளக்கி ஜலமொண்டு போவதையும் பார்த்துக்கொண்டு நிற்கையில் ஒரு குதிரை வண்டி வருகிற சப்தம் கேட்டது. ஒணுனைப் பிடித்து விளையாடிக்கொண்டிருந்த ஒரு பையன்மேல் வண்டி தாக்கியதால் அவன் காயப்பட்டு விழுந்து கத்திய சத்தமும் கேட்டது. உடனே கமலாட்சி விரைந்தோடி வண்டியை நிறுத்தி, ஆற்றில் தண்ணீர் மொண்டு வந்து காயப்பட்டவனுக்குக் குடிக்கக் கொடுத்துக் களையாற்றிக் காயத்தைக் கட்டி அந்த வண்டியிலேயே அவனை ஏற்றி அவனுடைய பெற்றோரிடம் கொண்டுபோய் விட்டு வந்தனள்.

இந்தப் பெண்மணியை அவர்கள் புகழ்ந்து அநேக ஆசீர்வாதங்களால் வாழ்த்தி தங்கள் பையனின் மதியீனத்தைக்குறித்து விசனித்தனர். கமலாட்சியின் தாய் தகப்பன்மாரும் அவள் குணத்தை மெச்சிக்கொண்டார்கள். விசாலாட்சியும் தன் தோழியின் அருமையான குணத்தைக்கண்டு சந்தோஷப்பட்டுத் தானும் அவ்வாறு நற்குணமுடையவளாக வேண்டுமென்று அதிகம் விரும்பினுள்.

பாடல்

காவடிச்சிந்து

“திருவுற்றிலகுகங்கை, முதலடி அல்லது பாளைவாய் கமுகில்வந்தூர்” என்ற மெட்டு.

1. சிந்துநதி தீரத்திலே அந்தமாயோர் [1]பட்டணமாம்
விந்தையாய்ப்பேர் ரத்னபுரி யென்பரே—அதில்
சந்தத மகிழ்ச்சிகொள்வரன்பரே.

2. கமலாட்சியென்ளுெரு பெண் கன்னி விசலாட்சியோடு
கண்யமா[2]யுலாவச் சென்று ளாற்றோரம்—வெகு
நன்னயமாய்க் காட்சியுண்டார் பின்னேரம்.

[1]ஓர் விரலைக் காட்டு.

3. [3]மீன் சுளும்பல் அலைமோதல் மேலே பசு தண்ணீருண்ணல்
ஆன பெண்டீர் குடத்தினுள் நீர் மொண்டு—போகக்
கரணவெகு ஆசைகொண்டாரே நின்று.

4. அவ்வேளையோர் குதிரைவண்டி அங்கு நின்ற பையன் மீது
தவ்வியோடிக் காயப்படச் செய்தது—கமலம்
எவ்விதமோ கண்டு அங்கே சென்றனள்.

5. [4]தண்ணீரூட்டிக் களையாற்றித் தக்கதாய்ச் சிகிச்சைசெய்து
தன்னோடவனை வண்டியிலேற்றியே—சென்றாளவன்
தன்னைப் பெற்றோரில்லம்வரை கூட்டியே.

6. இச்சிறுமி செய்கையதை எல்லவரும் மெச்சினரே
ஈன்றதாயர் தந்தையரும் மெச்சினர்—நாமும்
இச்சிறுமி மாதிரியைக் கைக்கொள்வோம்.

அபிநயக்குறிப்புகள்.

[2]வலது காலை முன்னெடுத்து வைக்க.
[3]வலது கைவிரலை அசைக்க.
[4]கையால் தண்ணீர் குடிப்பதுபோல செய்க.

கின்றர்கார்ட்டன் தொழில்

| | |
|---|---|
| சித்திரம். | மீன், மாடு, குடம், குதிரை, வண்டி, கரம், ஓணான் |
| களிமண்வேலை. | மாட்டுத்தலை, குடம், குதிரைத்தலை, ஓணான். |
| கட்டையடுக்கல். | ஆறு, பாலம், வண்டி. |
| காகிதமடித்தல். | மீன், வீடு. |
| குச்சிவைத்தல். | மரம், ஆற்றின் பாலம், குடம். |

---

## 19. குல்லா வியாபாரியும் குரங்குகளும்.

சேலம் ஜில்லாவுக்கடுத்த செவ்வாய்ப்பேட்டையென்னும் ஊரில் சேக்முகமது ரூவுத்தர் என்னும் ஒரு தையல்காரன் இருந்தான்.

அவன் தையல் வேலை முடிந்தபின் சொந்தமாகத் துணிவாங்கிக் குல்லாக்கள் தைப்பது வழக்கம். ஒருநாள் தான் தைத்த குல்லாக் கள் எல்லாவற்றையும் மூட்டையாகக் கட்டிக்கொண்டு அடுத்த கிரா மத்தில் விற்கும்படியாகச் சென்ருன். சூரியன் அதிகமாய்க் காய்ந் தபடியினுல் ஓர் கிணற்றருகில் கட்டமுதைச் சாப்பிட்டு விட்டு மரத்து நிழலில் படுத்துறங்கினுன். அந்த மரத்தில் அநேக குரங்கு களிருந்தன. இவனும் தலையில் ஒரு குல்லா வைத்திருந்ததைக் கண்ட அந்தக் குரங்குகள் கீழே வந்து மூட்டையைக் கலைத்து குல் லாக்களையெடுத்து ஒவ்வொன்றும் தன் தலையில் மாட்டிக்கொண்ட ன. சேக்முகமது தூக்கம் விட்டெழுந்து மூட்டையைப் பார்த்தான். அது வெறுமையாயிருந்தது. மேலே பார்த்தான். குரங்குகள் குல்லாமாட்டிக்கொண்டிருந்தன. எப்படி குரங்குகளிடமிருந்து பெற்றுக்கொள்வதென்று தெரியாமல் கலங்கினுன். ஆனுல் ஓர் யுக்தி தோன்றிற்று. குரங்குகள் மனிதர் செய்கிறபடி செய்யும் என்பதையறிந்தவனுனதால் தன் தலையிலிருந்த குல்லாவைக் கீழே எடுத்து எறிந்தான். அந்தக்ஷணமே குரங்குகள் எல்லாம் தங்கள் குல்லாவை எடுத்தெறிந்தன. சேக்முகமது ருவுத்தர் எல்லாவற் றையும் எடுத்து மூட்டையாகக் கட்டிக்கொண்டு ஊருக்குப்போய் விற்றுத் திரும்பினுன்.

### பாடல்

இராகம், நொண்டிச்சிந்து.

தெந்தின தினதினனு, தினதின

சேலம் ஜில்லாவினருகில்—ஒரு[1]
சிறிய கிராமமாம் செவ்வாய்ப்பேட்டை
சேக்முகமதென்ருெரு—தையற்காரன்
சிறப்பாக வாழ்ந்துமே ஜீவிக்கையில்

[1]ஒரு விரலைக் காட்டு.

[2]குல்லாக்கள் தைத்துக்கொண்டு—ஒருநாள்
சல்லாபமாய் விற்கப் பயணம் வைத்தான்
வழிநடந்தேகையிலே—கட்டமுதை
மரத்தடியிற் [3]சாப்பிட்டுப் [4]படுத்திருந்தான்
அந்த மரத்தின் மீது—குரங்குகள்
அதிகமிருந்தன குட்டிகளுடன்
விந்தையாய்க் கீழிறங்கி—மூட்டை கலைத்து
வேடிக்கையாய்க் குல்லாவை [5]மாட்டிக்கொண்டன
தூக்கம் விட்டெழுந்தவுடன்—ராவுத்தரும்
துரிதமாய் மூட்டையைத் தூக்கையிலே
ஐயோ! குல்லாக்களைக்காணோம்—என்றுகதறி
மெய்சோர மேலேபார்த்துக் குரங்கைக் கண்டான்
யோசனை சற்று செய்து—தன் குல்லாவை
[6]வீசியெடுத்தெறிந்தான் தலையைவிட்டு
இதைக்கண்ட குரங்குகளும்—தம் குல்லாக்களை
எடுத்தப்பாலெறிந்தன தரைதனிலே
எல்லாவற்றையுமெடுத்து—[7]மூட்டைகட்டி
ஏகியே விற்றுத் திரும்பினனே—தெந்தின

### அபிநயக்குறிப்புகள்

[2]குல்லா வைப்பதுபோல வலதுகையைக் குவித்துத் தலை
[யில்வை.
[3]வலது கையை வாயண்டை கொண்டுபோ.
[4]வலது கையைக் கன்னத்தில் வைத்து ஓர் பக்கம் சாயவும்.
[5]குல்லா வைப்பதுபோல வலது கையைக் குவித்துத் தலை
[யில்வை.

[6]தலைமேல் கையை வைத்துச் சட்டென்றெடு.
[7]இரண்டு கைகளாலும் கட்டுவதுபோற் காட்டு.

## கின்றர்கார்ட்டன் தொழில்.

| | |
|---|---|
| சித்திரம். | குரங்கு, மரம், மனிதன், குல்லாபோடும் கூடை, கத்தரிக்கோல். |
| காகிதமடித்தல் | குல்லா, பெட்டிக்கூடை, பீரோ. |
| குச்சிவைத்தல் | மரம், தையற்கூடை, நாற்காலி, யந்திரம். |
| கட்டையடுக்கல். | கிணறு. |
| விதைவைத்தல். | பாதை. |

---





## 20. நாயும் எருதும்.

கனகபுரம் என்னும் பட்டணத்தில் தனபாலன் என்ற ஒரு பெரிய சமுசாரி இருந்தான். அவனிடத்தில் டைகர் என்ற ஒரு நாய் இருந்தது. அவன் வீட்டின் பக்கத்தில் ஒரு பெரிய வைக்கோற்போர் உண்டு. ஒரு நாள் தனபாலனுடைய வண்டி எருது ஒன்று களைத்துப் போரண்டை போயிற்று. அப்போது போரின்மேல் படுத்திருந்த நாய் அதைத் தின்னவிடாமற்குரைத்து எருதைக் கடிக்கும்படி அதின்மேற் பாய்ந்தது. அப்பொழுது எரு

து நாயைப் பார்த்து: என்னப்பா, நீ செய்கிறது ஆச்சரியமாயிருக்கிறது. நீயும் தின்னமுடியாது, பசியாயிருக்கிற எனக்கும் தின்னும்படி இடங்கொடுக்கிறாயில்லையே என்று சொல்லி அதிக விசனத்துடன் பசியதிகரிக்க வீட்டிற்குத் திரும்பியது. சில மனிதர்களும் இதைப்போலவேயிருக்கின்றார்கள். தாங்களும் ஒரு சாமானை உபயோகிக்கமாட்டார்கள். அதை உபயோகிக்கிறவர்களுக்கும் கொடுக்கமாட்டார்கள். மற்றவர்களுக்குப் பிரயோஜனமானதை 'டைகர்' என்ற நாயைப்போல் நாம் மற்றவர்களுக்குக் கொடாமலிருப்பது நல்ல குணமல்ல.

---

## பாடல்

இராகம், காம்போதி ஆதிதாளம்.

"வாழைமரம் செழிப்பாக, அல்லது என் சாவல் போனவிடம்" என்ற வர்ண மெட்டு.

1. நாயொருநாள் போரின் மேலே நலமதாய்ப் [1]படுத்து
மேயவந்த எருதையும் தான் வெருட்டிக் குரைத்தது.

2. உபாயமாக எருதுமதை உதைத்துத் தள்ளாமல்
சகாயமாக நாய்க்கு ஒரு சங்கதி சொல்லிற்று.

3. சள் சள் என்று நாயும் வெகு சப்தமாய்க் குரைத்து
சாடி எருதைக் கடிக்கும்படி [2]ஓடிவந்தது.

4. என்னப்பா நீ செய்வது எல்லார்க்கும் சிரிப்பாம்
உன்னாலதைத் [3]தின்னவும் ஓர்காலுமாகாது.

## அபிநயக்குறிப்புகள்.

[1]ஓர்பக்கம் தலைசாய்க்க.

[2]ஓடுவதுபோல முன் எட்டிவைக்க.

[வா.

[3]சாப்பிடுவதுபோல் வலதுகையை வாயண்டை கொண்டு

5. நாய்க்குத் [4]தேங்காய் வேண்டாமென்ற நல்லுரைபோல
எய்த்து என்னைத் தின்னவும் இடமில்லையென்றாய்.

6. என்று சொல்லிக் காளை பசியோடு சென்றது
அன்று முதல் நாயின் பக்கம் [5]அணுகவேயில்லை.

[4]இருகைகளாலும் தேங்காய்போலக் காட்டு.
[5]இல்லையென்பதுபோல் கையைக் காட்டவும்.
6 ஷை ஷை

கின்றர்கார்ட்டன் தொழில்.

| | |
|---|---|
| சித்திரம். | எருது, நாய், வீடு, பட்டண வாசல், வைக்கோற்போர். |
| காகிதமடித்தல். | வீடு. |
| குச்சியடுக்கல். | வைக்கோற்போர். |
| களிமண்வேலை, | நாய்த்தலை, எருதின்தலை, தேங்காய். |
| ஓலைவேலை, | நாயின் கழுத்துப்பட்டை. |



21. தபாலாபீஸ்.

கதை

வட இந்தியாவில் மிதுனபுரி என்னும் பட்டணத்தருகில் சந்திரக்கோட்டை என்ற ஒரு சிற்றூருண்டு. அங்கு துரைசாமி என்

ஒரு பெரிய குடித்தனக்காரன் இருந்தார். அவருக்கு இரண்டு ஆண்மக்கள் பிறந்தார்கள். அவர்களுள் மூத்தவனுக்குச் சுந்தரம் என்றும், இளையோனுக்குச் சந்திரன் என்றும் பெயரிட்டு வெகு அருமையாக வளர்த்து வந்தார். சுந்தரம் மிதுனபுரி சென்று அங்குள்ள உயர்தர பாடசாலையில் கற்றுவந்தான். சந்திரன் உள்ளூர்ப்பள்ளியிலேயே படித்துவந்தான். ஒருநாள் சந்திரன் தன் தமையனுடன் பட்டணத்தைப் பார்க்கும்படி சென்றான். அங்குள்ள அழகிய மாளிகைகளையும், சிறந்த கட்டிடங்களையும் கண்டவுடன் அவனுக்கு ஆச்சரியம் உண்டானது. பலவித ஜாமான்களுள்ள ஷாப்புக் கடைகளும், உத்தியோக ஆபீஸ்களும், இன்னும் மற்ற இடங்களும் அவனுடைய கண்களுக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுத்தன. ஆனால் சந்திரனுடைய கண்களுக்கு அடிக்கடி தென்பட்ட ஒரு சிவப்புநிறம் பூசிய தூண்போன்ற கூண்டு அவனுடைய கவனத்தை அதிகமாய் இழுத்தது. சாவகாசமானபோது தன் அண்ணனிடத்தில் அந்தப் பெட்டி யென்னவென்று விசாரித்தான். கடிதம் போடும் தபால் பெட்டியென்று விபரம் சொல்லி, சுந்தரம் சந்திரனைத் தபாலாபீசுக்கு அழைத்துப்போய் அங்குள்ள பலவித வேலைகளையும் காட்டினான். தபாற் சேவகர்கள் ஓட்டமும் நடையுமாயிருப்பதையும், குமஸ்தாக்கள் கிறுகிறுவென்று நிறுத்தாமல் எழுதிக்கொண்டிருப்பதையும், போஸ்ற்மாஸ்ற்றர் பங்கா இழுத்துக்கொண்டிருக்கக் கணக்குகளைத் தணிக்கை செய்வதையுங் கண்ட சந்திரனுக்குச் சொல்லிமுடியாவாச்சரியம் வரவே, அந்த ஆபீஸை விட்டுத் திரும்பப் பிரியமின்றியிருந்தான். சாயந்திரம் வீடு சென்றவுடன் தன் தந்தை தாயரிடம் எல்லாம் சொன்னான். தபாலாபீசைப்பற்றி அதிகமாய்ச் சொன்னான். அதன்பின் தன் தகப்பனுக்குச் சேவகன் கடிதம் கொண்டுவரும்போதெல்லாம் ஆபீஸை நினைப்பான். இந்த எண்ணம் உதிக்கவே, அவன் வெகு கவலையோடு படித்துப் பட்டணம் சென்று, பீ. ஏ. பாஸ் பண்ணினவுடன் தபாலாபீஸ் உத்தியோகத்திலமர்ந்து வெகு விரை

வில் முன்னேறி ஹெட் ஆபீஸ் போஸ்ற்மாஸ்ற்றராகி உயர்ந்த சம்பளம் வாங்கினுன். உற்று நோக்கும் (ஆப்சர்வேஷன்) சக்தியினுலும் உயர்ந்த நோக்கத்தினுலும் சந்திரன் அரும்பிரயாசையெடுத்து அப்பதவிக்கு வந்தான்.

பாடல்

இராகம், ஆனந்தபைரவி. திஸ்ர ஏகதாளம்.

அகப்பேய் சித்தர் பாடலில்

(தூராதி தூரமடி அகப்பேய் தூரமுமில்லையடி, என்றமெட்டு)

1. சந்திரக் கோட்டையிலே சுந்தரம் சந்திர னென்றிருவர்
சொந்தமாகப் பிறந்தார் துரைசாமி யென்பவர்க்கு

2. விந்தை மிதுனபுரியிற் சுந்தரம் வித்தைகள் கற்றுவந்தான்
அந்தமாக வொருநாள் சுந்தரம் அண்ணனுடனே சென்றுன்

3. சென்றவன் பார்த்தானே சிறந்த கட்டிடமாபீஸ்களை [லை.
அன்றைக்குண்டான சந்தோஷத்திற்கு அளவு ஒன்றுமில்

4. தபாற்பெட்டியைக் கண்டு தம்பி தமையனிடம் கேட்டான்
தபாலாபீஸ் கூட்டித் தம்பிக்குத் தக்க விபரம் சொன்னுன்.

5. அன்றுமுதலாக அவனுக்கோர் ஆசையுமுண்டாக
நன்றிது வேலையென்று படித்து நலமாய் உத்தியோகம் வந்தான்.

கின்றர்கார்ட்டன் தொழில்

சித்திரம். தபாற்பெட்டி, வீடு, ஆபீஸ் முதலியன.
கட்டையடுக்கல். பாலம், ரெயில்வண்டி, கிணறு, தெப்பம்.
குச்சியடுக்கல். வீடு, மேசை, நாற்காலி, தபாற்பெட்டி, அல்மேரா.
காகிதமடித்தல். அல்மேரா, கட்டை, வேஷ்டி, பூட்ஸ், தபாற்பை, [மைக்கூடு.

2. ஆணிவே ரூன்றியே மரமதாகும் கிளை
கோணியே பிரிந்திடும் [3]கொப்புகளாய்— அந்த

3. நிழல்தரும் மனிதர்க்கு மிருகங்கட்கும் நல்ல
கழனிகட் கதி [4]னிலை உரமாகுமே— அந்த

4. [5]பட்சிகள் தங்களுக்கு மெச்சும்படி கூடு
குச்சிகளாலே கட்டும் உச்சியிலே— அந்த

5. கனிகள் நிறைந்திருக்கும் இலைகளுடேயதில்
இனிமையாய் மணந்தரும் [6]புஷ்பமுண்டு— அந்த

6. ரோட்டிலும் வீட்டிலும் தோப்பிலுமே மரம்
[7]நாட்டி வைப்பர் வெகு நன்மையதாய்— அந்த

7. வீடுகட்டும் சாமான்கள் [8]வெட்டலாமேயதால்
ஓடும் வண்டி, மேஜை, ஸ்றூல், செய்திடலாம்— அந்த

8. இயற்கையை செழிப்பிக்கும் எதுகரமிதை
இயற்றிய கடவுளின் [9]மகிமையைப் பார்— அந்த

அபிநயக்குறிப்புகள்.

[3]இரண்டு கைகளையும் விரிக்கவும்.
[4]இரண்டுகரங்களையும் விரித்து இலைபோற் காட்டு.
[5]இரண்டு புஜங்களையும் பறப்பதுபோல் அசைக்க.
[6]வலது கையை மூக்கண்டை முகருவதுபோல் கொண்டு [வரவும்.
[7]முதல் குறிப்புப்போல்.
[8]கைகளால் வெட்டுவதுபோற் காட்டுக.
[9]இரண்டு கரங்களாலும் கடவுளைத் துதிக்க.

## கின்டர்கார்ட்டன் தொழில்.

| | |
|---|---|
| சித்திரம் | மரம், இலை, பழக்கொத்து, பூ, ரோட்டின்மேல் மரம், வீடு, வண்டி, மேஜை, ஸ்டூல் முதலியன. |
| குச்சிவைத்தல். | மரம், வீடு, மேஜை, நாற்காலி, கூடு. |
| காகிதமடித்தல். | வீடு, இலை. |
| கட்டையடுக்கல். | ரோடு, பாலம், ரோட்டின் பக்கத்திலுள்ள கிணறு. |
| விதைவைத்தல். | ரோடுபோல் விதைவைத்து அதனூடே குச்சிகளால் மரங்களை உண்டுபண்ணுமாதிரி செய்யலாம். |



## 23. பனைமரமும் சுரைச்செடியும்.

ஒரு தோட்டத்தில் அநேக கனிமரங்களிருந்தன. வேலியருகாமையில் பனைமரங்களும் வளர்ந்திருந்தன. தோட்டக்காரன் ஆடி மாதத்தில் பூசணி, சுரை, புடலை முதலிய காய்களின் விதைகளை நட்டு வைத்து வருவது வழக்கம். பூசணி தரையில் படரும். புடலை பந்தலில் உயர ஏறும். சுரை மரத்திலோ வீட்டிலோ எங்கும் கொடிசுற்றிக் காய்க்குமியல்புவாய்ந்ததினால் ஒருபனைமரத்தடியில்

அவ்விதைகளை நட்டான். ஒரு செடி சீக்கிரத்தில் அம்மரத்தின் உச்சிவரை படர்ந்து ஏறிப்பூத்துக் காய்த்தது. ஒருநாள் தனது கொழுகொம்பாகிய பனைமரத்தைப் பார்த்து: ஐயா, நீங்கள் பிறந்து எவ்வளவு காலமாயிற்று என்று கேட்டது. நான் பிறந்து நூறு வருஷமாயிற்றென்று பனை சொல்லிற்று. ஆகா! அப்படியா? வயது நூறு ஆகியும் இவ்வளவுதானு வளர்த்தி? நான் பிறந்து ஆறுமாதந்தானே யாயிற்று. பாருங்கள், உங்கள் தலைக்குமேல் ஏறிவிட்டேன் என்று கர்வத்துடன் சொன்னது. அப்போது பனை: தம்பி உன்னைப்போல் வருஷமொரு செடி என் மேலேறுவதுண்டு. ஆறு மாதத்திற்குள் அது இருந்த இடமும் தெரியாது. நீயும் அவர்களிலொருவனே யன்றி வேறல்ல. வீணுப் பெருமை பாராட்டாதே என்று அதட்டினது. சிறிது காலத்துக்குள் சுரைச்செடி காய்ந்து போயிற்று. சீக்கிரம் பழுப்பது சீக்கிரம் உளுக்கும்.

பாடல்

மோகனம். ஆதிதாளம்.

தானனே தானனே தானதத்தம் தானனே.

சுரை. 1 பனைமரமே பனைமரமே பருத்த[1] உடம்பெடுத்தனையே
எனைப் பாரிரு [2] மூன்று மாதம் எழும்பிவிட்டேன் உனக்
[கு மேலே

2 [3] எத்தனை வருஷமாச்சு இங்கு நீ பிறந்துதானும்
அந்தமான பனைமரமே அறிவிப்பாய் எனக்கு நீயும்

பனை. 3 ஆறு மாதத்தில் வளர்ந்த அழகான சுரைச் செடியே
நூறு வருடங்களாச்சு நுட்பமாக நான் பிறந்து

சுரை. 4 வயது நூறு ஆகியுமே [4]வளர்த்தியு மிவ்வளவுதானு
தயங்கு ஆறு மாதத்திற்குள் நானுனக்குமேல் வளர்ந்
[தேன்

பனை. 5 அறிவேன் தம்பி உன்னைப்போல அரை வருஷத்திற்
[கோர் சுரை
விரைவாக [5]என்மேலேறி விழுந்து செத்துப்போகுமையா

6 அதைப்போல நீயும் தானும் அழிந்துவிடுவாயே யிந்தக் கதைபோல மனுஷர் பலர் கஷ்டத்துக்குள்ளாகிறவர்

அபிநயக்குறிப்புகள்

[1]இரண்டு கைகளையுமுயர்த்திக் காண்பிக்கவும்
[2]ஆறு விரல்களைக் காட்டு.
[3]வலதுகையை மூடி அசைக்கவும்
[4]வலது உள்ளங்கையை மார்பண்டை வைத்துக் காட்டு
[5]வலது உள்ளங்கையை நெற்றிநேர் வைக்கவும்.

கிண்டர்கார்ட்டன் தொழில்

| | |
|---|---|
| சித்திரம். | பனைமரமும், சுரைச்செடியும். |
| காகிதம் கிழித்தல். | பனைமரம். |
| குச்சியடுக்கல். | தோட்டம், பனைமரம். |
| களிமண் வேலை. | சுரை இலை, தண்ணீர்விடும் தோண்டி |
| பனை ஓலை. | கூடை, பாய். |
| கயிறுபோடுதல். | பனங்காய். |
| கட்டையடுக்கல். | கிணறு. |
| விதை வைத்தல். | தோட்டத்தின் பாதை. |

---

## 24. சொர்னத்தின் சுறுசுறுப்பு.

கங்காநதி தீரத்தைச்சேர்ந்த கோமதி நகரத்தில் கோமதி யென்னுமோர் உபநதியுண்டு. அந்தச் சிற்றாற்றினிருகரைகளி லும் அழகான பசுமைநிறமுள்ள தோப்புகளும் நந்தவனங்களும் உண்டு. சிறுமிகள் அனுதினமும் அங்குசென்று புஷ்பம் பறித்து வருவதுண்டு. ஒருநாள் பங்கஜம் சொர்னம் என்ற இரு சிறுமிகள் அதிகாலையில் அங்கு சென்றனர். பங்கஜம் பள்ளிக்கூடத்திலும் கொஞ்சம் சோம்பலாயிருப்பது வழக்கம். ஆனால் சொர்னமோ வெகு கெட்டிக்காரி. கடைமைகளை முடிப்பதில் வெகு திட்ட

வட்டமாயிருப்பாள். பங்கஜம், புஷ்பவனத்தையும் அருகிலோடும் சிறு நதியையும் கண்டவுடனே சொர்னத்தைக் கூப்பிட்டு ' அக்கா இது வெகு அழகான இடம்.

சிறந்த மலர்களும், உருசியான கனிவர்க்கங்களும் பசுமையான இலைகளுமிருக்கிறது அதிக நேர்த்தியாயிருக்கிறது. நாம் இங்குள்ள கனிகளைத்தின்று ஆற்று ஜலத்தைக் குடித்துச் சந்தோஷமாயிருப்போம். எனக்கும் தூக்கம் வருகிறுப்போலிக்கிறது' என்று சொல்லி ஆற்றில் தண்ணீர் குடிக்கச் சென்றனள். சொர்னம் பங்கஜத்தைக் கூப்பிட்டு ' தங்காய் நீ சொல்வது பிசகு. தங்கத்திஞல் செய்த கத்தியிருந்தால் வயிற்றைக் கீறலாமா? நமது கட்மை விசேஷம். இந்நேரம் பள்ளிக்கூடம் துவங்கியிருக்கும். நாம் சீக்கிரம் செல்லவேண்டும்' என்ருள். இந்தச் சொற்கள் பங்கஜத்தை அதிகம் வருத்தப்படுத்தினது. சொர்னம் தோப்புக்குள் கொஞ்சத்தூரம் சென்று பங்கஜத்தைக் கூப்பிட்டாள்.

இவள் எழுந்து போனவுடனே அங்கு கும்பல் கும்பலாய் ஒரே வரிசையில் போய்க் கொண்டிருந்த எறும்புக்கூட்டத்தைக் காட்டி அவைகள் செல்கின்ற வேகத்தையும் வெண்மை நிறமான பண்டத்தைத் தூக்கிப்போகிற ஆத்திரத்தையும் காட்டி அவைகளின் சுறுசுறுப்பைப்பற்றி எடுத்துக் கூறிஞள். பங்கஜம் சற்று உற்றுநோக்கி யோசித்தவுடனே 'சோம்பேறியே எறும்பண்டைக்குப் போய் அதின் வழிகளைப் பார்த்து நட' என்ற வசனம் ஞாபகத்தில் வந்தது. உடனே சொர்னத்துடன் பள்ளிக்கூடத்துக்கு விரைந்து ஓடி சரியான காலத்தில் வகுப்புக்குப் போய் ஒரு ரோஜாப் புஷ்பத்தையும் உபாத்தினிக்குக் கொடுத்தாள். அன்றுமுதல் பங்கஜம் அதிக சுறுசுறுப்பாய்ப் படித்துத் தேர்ந்து வெகு கெட்டிக்காரியாகி அதிக வெகுமானங்களையுமடைந்தாள்.

கின்றர்கார்ட்டன் பிள்ளைகளே, உற்றுநோக்கும் சக்தியுடன் சுறுசுறுப்பும் உங்கள் ஆபரணமாக இருக்கட்டும்.

('ஸ்ரீராமச்சந்திரனே' என்ற மெட்டு)

1. கங்கைநதி தீரத்திலே
கோமதி நகரமதில்
பங்கஜம் சொர்னம் வசித்து வந்தனர்
சென்றார் ஓர்காலை தோப்பிற்கு
நன்றாய்க் கனிகளைத் தின்றனர்.

2. சோம்பலான பங்கஜம்
சொகுசுடனிருப்போமென்று
சோதரி சொர்னத்தினிடம் சொல்லினள்
படுத்துறங்கலா மென்றனளதைத்
தடுத்துச் சொர்னம் வேண்டாமென்று

3. வரிசையாய் நடந்துசென்ற
சிறிய எறும்புக் கூட்டத்தை
உரிமையுடனே யழைத்துக் காட்டினள்
கூர்ந்து பார்த்தனள் பங்கஜம்
ஓர்ந்து கொண்டனள் நெஞ்சத்தில்

4. ஓடியே விரைந்து பள்ளிக்
கூடமதிலே சென்று
நாடியே படித்து நிதம் தேறினள்
சிறிய எறும்புகள் போலவே நாம்
சுறு சுறுப்பாயிருப்போமே.

கின்டர்கார்ட்டன் தொழில்.

சித்திரம். மரங்கள், பழம், பழக்குலை, ஆற்றினோட்டம், ஆற்றங்கரைகளில் மரங்களமைத்து வீடுகளையும் வரைக.

குச்சியடுக்கல். மரம், பள்ளிக்கூடம், மேசை, நாற்காலி, கரும்பலகை, கொடி, புஷ்பத்தொட்டி, இந்தியா படம்.

| | |
|---|---|
| காகிதமடித்தல். | ஆற்றில்போகும் ஓடம், பள்ளிக்கூடம், புஸ்தகம், இலை, பூ. |
| விதை வைத்தல். | ரஸ்தாக்களும் பிரிவுபாதைகளும. |

A. M. Lenox Press, Pasumalai,—1922.

# மதிப்புரை

By Rev. M. S. Taylor, Professor,
Union Theo. Seminary and Tamil Editor,
United Church Herald.

**சின்னஞ்சிறார்க்கேற்ற கதையும் பாடலும்.**—இப்பேர்வாய்ந்த புத்தகம் சில வருடங்களாக பழனி போர்டிங் பாடசாலையில் தலைமை உபாத்தியாயராயிருந்தவரும் இப்போது பசுமலை ஐக்ய வேதசாஸ்திர சாலையில் ஆசிரியராயிருப்பவருமான கனம் J. S. குருபாதம் அவர்களால் உண்டாக்கப்பட்ட நூல். இதின் விசேஷித்த நோக்கம் சிறுவர் சிறுமியர் எளிதாகவும் சந்தோஷமாகவும் விஷயங்களைக் கற்றுக்கொள்ள உதவி செய்வதே. கல்வியானது பயன்படவேண்டுமானால் அது மனதைக் கவரத்தக்கதான விதமாய்க் கற்றுக்கொடுக்கப்படவேண்டும். அப்பாடங்களின்மேல் மாணவர்க்கு அவா உண்டாக்கச்செய்வது ஆசிரியரின் கடமையாம். அத்துடன் படித்த விஷயம் மனதிற் பதியத்தக்கதாகவும் கற்றுக்கொடுக்கவேண்டும். கற்பிக்கப்படும் விஷயம் பாலியரின் குணசீல விர்த்திக்கும், அவர்கள் பிரயோஜனமுள்ள நகரவாசிகளாக உதவிசெய்வதற்கும் ஏற்றதாயிருக்கவேண்டும். இவைகளை மனதில் வைத்து இந்நூலை ஆராய்ந்தால் இது ஓர் சிறந்த நூலென்று சொல்லலாம். மாணாக்கருக்கு உதவியாக நல்ல படிப்பினையுள்ள கதைகளும், அவைகளை விளக்கத்தக்க அப்பியாசக்குறிப்புகளும், மனதைக் கவரத்தக்கதும் சிறுவர் பிரியப்படும் ராகங்களில் பாடப்பட்டதுமான பாடல்களும் அமைந்த புஸ்தகம். இவைகளிற்சில ஐக்யசபைத் தூதிகையில் பிரசுரிக்கப்பட்டு அநேகரால் சிலாகித்துப் பேசப்பட்டவை. இதன் ஆக்கியோன் சிறுவர்க்குள் வேலைசெய்து அநுபவமுடையவராய் அவர்களுக்குத் தேவையான விஷயம் இன்னதென்று நன்குணர்ந்து எழுதியிருப்பதால் இந்நூல் மாணாக்கருக்கும் உபாத்திமாருக்கும் அதிகப் பிரயோஜனமாயிருக்குமென்று நம்புகிறோம். அவருடைய நன் முயற்சிக்காக அவரை வாழ்த்துகிறோம். உபாத்திமாரும் வித்தியா இலாக்கா உத்தியோகஸ்தரும் இதைத்தக்கவாறு உபயோகப்படுத்தி ஆக்கியோனை உற்சாகப்படுத்துவார்களென்று நம்புகிறோம்.

இப்புஸ்தகத்தில் 24 பாடங்கள் உண்டு. இதன் விலை 5 அணா மாத்திரம். புஸ்தகம் வேண்டியவர்கள் பசுமலை கனம் J. S. குருபாதம் அவர்களுக்கு எழுதி பெற்றுக்கொள்ளவும். எமக்கு அனுப்பிய பிரதிக்காக வந்தனம் கூறுகிறோம்.